# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092373

1. District : மாவட்டம் தூத்துக்குடி  PS: காவல் நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி  Year ஆண்டு 2019  FIR No. மு.த.அ. எண் 09/2019  Date நாள் 05.10.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7 and 12
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04.10.2019 ம்  Date from : நாள் முதல் 04.10.2019  Date to : நாள் வரை --
   Time Period : நேர அளவு தேதி மாலை 16.30 மணிக்கு முன்பாக  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.10.2019  Time : நேரம் 08.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.10.2019  Time : நேரம் 09.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,கோவில்பட்டி சுமார் 60 கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ரா.கருப்பசாமி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் தனிக்காணிப்பாளர் . (துணை வட்டாட்சியர்)  (g) Address : முகவரி உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1.)திரு.R.கிரி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), கோவில்பட்டி (2.)திரு.K.மாணிக்கவாசகம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கோவில்பட்டி (3.)திரு.சீ.சிவராமகிருஷ்ணன், அலுவலக மேலாளர், (4.)திரு.M.திவான், ஊரக வளர்ச்சி அலுவலர், (5.)திரு.G.பெருமாள்சாமி, (6.)திரு.K.பொன்ராஜ், (7.)திரு.துரைமுருகன், (8.)திருமதி.ஆ.மாலதி, பஞ்சாயத்து செயலாளர், (9.)திரு.தங்கராஜ், பஞ்சாயத்து செயலாளர். (10.)திரு.S.பீட்டர், (11.)திரு.பாலமுருகன், (12.)திரு.S.சூடாமணி,

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No, if any:
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed **Tr.R.Authees** Rank **Inspr.** to take up the Investigation / Refused investigation / transferred to PS ........................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
திரு.ஜா.ஹெக்டர் தர்மராஜ்,
காவல் துணை கண்காணிப்பாளர்
Name ஊ.த.(ம), க.துறை; ...........
Rank: தூத்துக்குடி 05.10.2019. No. எண் .......

15. Date & Time of despatch to the court **05.10.2019 at 10.30 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2019, பிரிவ 7, 12 **of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018.**

## Accused :

1. Tr.Tr.R.Giri,
   Block Development Officer
   (Block Panchayat)
   Kovilpatti Panchayat Uion,
   Kovilpatti,
   Thoothukudi District.

2. Tr. K.Manickavasagam,
   Block Development Officer
   (Village Panchayat)
   Kovilpatti Panchayat Uion,
   Kovilpatti,
   Thoothukudi District.

3. Tr.S.Sivaramakrishnan
   Office Manager,
   BDO Office, Kovilpatti
   Thoothukudi District.

4. ~~Tr.S.[illegible]~~,
   Tr.M.Diwan,
   Rural Welfare Officer
   BDO Officer, Kovilpatti,
   Thoothukudi District.

5. Tr.G.Perumalsamy,
   Panchayat Secretary
   Thittankulam Panchayat,
   Thoothukudi District.

6. Tr.G.Ponraj,
   Panchayat Secretary,
   Thonukal Panchayat,
   Thoothukudi District.

7. Tr.S.Durai Murugan,
   Panchayat Secretary
   Pandavarmangalam Panchayat.

8. Tmt. M.Malathi,
   Panchayat Secretary
   Kizhavipatti Panchayat.

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சிகளின் செயலர்கள், மற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் அதிபர்கள் ஆகியோர்கள் மூலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செய்ய வேண்டிய கடமைகளான பிளான் அப்ரூவல் மற்றும் பிளாட் அப்ரூவல், புதிய வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்தல் மற்றும் பணிகளுக்கு பொதுமக்கள் இடமிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார வளர்ச்சி அலுவலக பணியாளர்களும், லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 04.10.2019-ம் தேதி 16.30 மணி முதல் 05.10.2019-ம் தேதி அதிகாலை 02.30 மணி வரை கண்காணிப்பாளர் (துணை வட்டாட்சியர்) / துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.ரா.கருப்பசாமி அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் கண்காணிப்பாளர் (துணை வட்டாட்சியர்) / துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.ரா.கருப்பசாமி அவர்கள் கொடுத்த புகார் மனுவை 05.10.2019-ம் தேதி

9. Tr.P.Thangaraj,
   Panchayat Secretary
   R.Venkateswarapuram Panchayat.

**Private Individual :**

10. Tr.S.Peter,
    S/o.Tr.Sebastian,
    Contractor
    16/3, Pannaithottam St.,
    Kovilpatti.

11. Tr.P.Balamurugan,
    S/o.Pathinettampadiyan,
    Sub-Contractor
    81, Chthambarapuram,
    Lingampatti PO,

12. S.Soodamani,
    S/o.Tr.Subbiah Thevar,
    Real Estate Owner,
    79/3, North Street,
    Karisalkulam

காலை 08.00 மணிக்கு பெற்று இன்று (05.10.2019) காலை 09.00 மணிக்கு நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 09/2019, பிரிவு 7, 12 of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018 –ன் படி மார்ஜினில் கண்ட பன்னிரண்டு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் ரா.கருப்பசாமி, கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் எட்டையபுரம் ரோட்டில் உள்ள கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் இரகசியமாக 04.10.2019-ம் தேதி மாலை 14.00 மணி முதல் 16.30 மணி வரை கண்காணித்ததில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சிகளின் செயலாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் அதிபர்கள் ஆகியவர்கள் மூலம் தாங்கள் செய்ய வேண்டிய பணிகளான பிளான் அப்ருவல், பிளாட் அப்ருவல், புதிய வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்தல் மற்றும் பணிகளுக்கு பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 04.10.2019 மாலை 16.30 மணி முதல் எட்டையபுரம் ரோட்டில் அமைந்துள்ள கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை தணிக்கை செய்ததில் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலக அறைக்குள் நுழையும் பொழுது வலது பக்கத்தில்

அமர்ந்திருந்த திரு.சீ.சிவராமகிருஷ்ணன், அலுவலக மேலாளர் என்பவரின் இருக்கைக்கு பக்கம் உள்ள அவரது இரும்பு பீரோவிலிருந்து ரூ.5,200/-ம், அதே அலுவலக அறையில் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.R.கிரி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) என்பவரின் சட்டையின் இடது புற வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.7,640/-ம், அவரது அலுவலக அறையில் அவரது பிரவுன் நிற பையினுள் கத்தையாக இருந்த பணம் ரூ.20,000/-ம், அதே பையினுள் வெள்ளை நிற கவருக்குள் இருந்த பணம் ரூ.15,000/-ம், அலுவலகத்தில் 'அ2' இருக்கையில் அமர்ந்திருந்த திரு.M.திவான் என்பவரது சட்டைப் பையிலிருந்து ரூ.4,000/-ம், அவரது இருக்கைக்கு பின்புறமுள்ள இரும்பு பீரோவினுள் மேல் தட்டில் கோப்புகளுக்கு இடையில் பயிற்சி குறிப்பேட்டின் உள் இரண்டாக மடிக்கப்பட்ட நிலையில் ரூ.12,500/-ம், அதே இரும்பு பீரோவின் இரண்டாவது தட்டில் பெறுநர் வட்டார வளர்ச்சி அலுவலர், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் என்றும் அனுப்புகை எழுத்தர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மண்டல அலுவலகம், திருநெல்வேலி என்று எழுதப்பட்டிருந்த வெள்ளை நிற கவருக்குள் இருந்த பணம் ரூ.12,000/-ம், மேற்படி அலுவலக அறையில் நடுவில் முதலில் நின்று கொண்டிருந்த திரு.G.பெருமாள்சாமி, திட்டங்குளம் ஊராட்சி செயலாளர் என்பவரிடமிருந்து ரூ.3,880/-ம், அதே அலுவலக அறையில் நின்று கொண்டிருந்த திரு.க.பொன்ராஜ், தோணுகால் ஊராட்சி செயலாளர் என்பவரிடமிருந்து ரூ.5,600/-ம், அதே அறையில் அடுத்து நின்று கொண்டிருந்த திரு.S.துரைமுருகன், பாண்டவர்மங்கலம் ஊராட்சி செயலாளர் என்பவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.5,000/-ம், அவர் கையில் வைத்திருந்த துணிப்பையில் பேப்பர்களுக்கு இடையில் தனித்தனியாக வைத்திருந்த ரூ.24,560/-ம், அதே அறையில் நின்று கொண்டிருந்த திரு.S.பீட்டர், (ஒப்பந்தகாரர்) பண்ணைத் தோட்டம் தெரு, கோவில்பட்டி என்பவரிடமிருந்து ரூ.24,000-ம், அலுவலக வராந்தாவில் நின்று கொண்டிருந்த திரு.P.பாலமுருகன் ஒப்பந்தகாரர் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.20,000/-ம், அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த திரு.S.சூடாமணி த-பெ சுப்பையாத் தேவர் என்பவரிடமிருந்து ரூ.33,500/-ம், அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த திருமதி.M.மாலதி, கிழவிப்பட்டி ஊராட்சி செயலாளர் என்பவரிடமிருந்து ரூ.12,000/-ம், மேற்படி அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறையினுள் அமர்ந்திருந்த திரு.க.மாணிக்கவாசகம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என்பவர் இருக்கைக்கு வலதுபுறம் இருந்த பீரோவின் உள் பகுதியில் கருப்பு நிற கைப்பையில் இருந்து ரூ.82,500/-ம், கோவில்பட்டி வட்டார

வளர்ச்சி அலுவலக வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த திரு.தங்கராஜ், ஊராட்சி செயலாளர் R.வெங்கடேஸ்வரபுரம் என்பவரது வெள்ளை நிற ஸ்கார்பியோ TN 69 BY 3031 வாகனத்தின் டேஸ் போர்டிலிருந்த பணம் ரூ.30,000/-ம் ஆக மொத்தம் ரூ.3,17,380/- இருந்தது. மேற்படி பணத்திற்கு அவர்களிடம் உரிய விளக்கம் கேட்க அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லாததாலும், மேற்படி பணம் அலுவலக பணிகளுக்காக கையூட்டாக பெற்ற மற்றும் கொடுப்பதற்கான பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததாலும் 04.10.2019 மாலை 16.30 மணி முதல் 05.10.2019 அதிகாலை 02.30 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 12-ன் படியும் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி பணியாளர்கள் மற்றும் தனிநபர்கள் மற்றும் அந்த அலுவலகத்திலிருந்த பெண் பணியாளர்களிடமும் இருந்த பணத்திற்கு அவர்கள் தெரிவித்த ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கத்திற்கான பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் அலுவலக பணியாளர்கள் மற்றும் தனி நபர்களிடம் சந்தேகப்படும்படியாக இருந்ததால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டு இத்துடன் செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,17,380/- மற்றும் பின் இணைப்பு 1 முதல் 12 வரையும் மற்றும் செயல்முறைகளில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- ரா.கருப்பசாமி, 05.10.19, கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (ஆயம்) அலுவலகம் துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம். Sir, Received the complaint on 05.10.2019 at 08.00 hrs, I am registering a case in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.09/2019, u/s 7, 12 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 today (05.10.2019) at 09.00 hrs Sd/- G.Hector Dharma Raj, Deputy Supdt. of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.ரா.கருப்பசாமி அவர்களின் அசல் புகார் மனு மற்றும் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு – 1 முதல் 12 வரை உள்ளதை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக ஆய்வாளர் திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைத்தேன்.

5/10/19

**Deputy Superintendent of Police**
**Vigilance And Anti Corruption**
**Thoothukkudi District**
**Thoothukkudi**